விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

**Valampurii**

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 01 செவ்வாய்க்கிழமை (15.05.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 147

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## வில்பத்து சரணாலயப் பகுதியில் புலிகளின் விமானத் தளம் இல்லை

### தீவிர தேடுதலின் பின் அறிவிப்பு

வில்பத்து சரணாலயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் விமான ஓடுபாதை இருப்பதாக் தெரிவித்த தகவலில் எந்தவிதமான உண்மையும் இல்லையென ஜாதிக ஹெல உறுமயவின் சுற்றாடல் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் கடைசியாக மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலையடுத்து வில்பத்து சரணாலயத்தில் அவர்களுக்கு விமான ஓடுபாதை இருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து ஐந்து நாட்களாக சரணாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலினையடுத்து அப்படியான ஓடுபாதை எதுவும் இல்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (ச-3)

## பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட 270 பேருக்கு மரண தண்டனை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஊழியர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்து துண்டுப் பிரசுரம் ஒன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முன்தினம் இரவு ஒட்டப்பட்டுள்ளது.

நாட்டைக் காக்கும் தேசிய அமைப்பு என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள இந்த துண்டுப் பிரசுரத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் துறைசார்ந்த முறையில் எண்ணிக்கை ரீதியாக கொலை செய்யப்படுவார்கள் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் புரிந்த குற்றத்தைக் குறிப்பிட்டு கலைப்பீடத்தில் 86 பேருக்கும் முகாமைத்துவ பீடத்தில் 67 பேருக்கும் மருத்துவ பீடத்தில் 38 பேருக்கும் விஞ்ஞான பீடத்தில் 27 பேருக்கும் (04 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய அரசு அமைப்பதற்கு ஜனாதிபதி மகிந்த இணக்கம்

## ஐ.தே.க.எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆலோசனைகளுக்கு அமைய தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. நீண்ட கால முயற்சியை அடுத்து இவ் இணக்கம் காணப்பட்டதாக தெரிவிக்கப் பட்டது. (04 ஆம் பக்கம் பாார்க்க)

## மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகள் நேற்று ஆரம்பம்

அதிகரித்துவரும் சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் இலங்கையில் நிலவும் பாரதூரமான மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரிக்கவும் புலன் விசாரணை செய்யவுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

குழு நேற்று தனது விசாரணை நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது.

நீதிவான் நிசங்க உடலகமவின் தலைமையில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஜனாதிபதி ஆணைக்குழு மூதூரில் கடந்த

## தி.மு.க.கட்சிக்காரனாகவே தொடர்ந்தும் இருப்பேன்

### தயாநிதி மாறன் தெரிவிப்பு

(சென்னை)

இந்திய மத்திய அரசின் தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சர் தயாநிதி மாறனை நீக்கவேண்டுமென்று அவர் சார்ந்த தி.மு.கவின் நிர்வாகக்குழு முடிபு செய்ததையடுத்து அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதனிடையே சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த தயாநிதி மாறன் என்றைக்கும் தனது தலைவர் கருணாநிதியே என்றும் அவர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயிலிருந்து இலங்கை வந்த தமிழ் இளைஞனைக் காணவில்லை

### நோர்வே நாளேடு தெரிவிப்பு

(கொழும்பு)

நோர்வே நாட்டின் குடியுரிமை பெற்ற சௌந்தரராஜன் தம்பிராஜா (வயது 31) என்ற தமிழ் இளைஞர் கடந்த மார்ச் 31 ஆம் திகதி அதிகாலையில் இருந்து இலங்கையில் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவர் 1993 ஆம் ஆண்டிலிருந்து 13 வருடங்களாக நோர்வேயில் வசித்து வருகிறார். தனது திருமண விடயமாக கடந்த வருடம் இலங்கை வந்த இவர் கடந்த ஆண்டு

அதிகரித்துவரும் சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் இலங்கையில் நிலவும் பாரதூரமான மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரிக்கவும் புலன் விசாரணை செய்யவுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கடந்த சில மாதங்களுக்கு முன்னதாக அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று தனது விசாரணை நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது.

நீதிவான் நிசங்க உடலகமவின் தலைமையில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஜனாதிபதி ஆணைக்குழு மூதூரில் கடந்த வருடம் பட்டினிக்கு எதிரான அமைப்பு என்ற சர்வதேச தன் (04 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

நோர்வே நாட்டின் குடியுரிமை பெற்ற சௌந்தரராஜன் தம்பிராஜா (வயது 31) என்ற தமிழ் இளைஞர் கடந்த மார்ச் 31 ஆம் திகதி அதிகாலையில் இருந்து இலங்கையில் காணாமல் போயுள்ளார். காணாமல் போவதற்கு முன்னர் இவரை இராணுவத்தினர் விசாரணை செய்ததாக தெரிவிக்கப்பட்டது.

இவர் 1993 ஆம் ஆண்டிலிருந்து 13 வருடங்களாக நோர்வேயில் வசித்து வருகிறார். தனது திருமண விடயமாக கடந்த வருடம் இலங்கை வந்த இவர் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் உக்கிரமடைந்த மோதல்களை தொடர்ந்து கிளி (04 ஆம் பக்கம் பார்க்க)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலக காவலாளி சுட்டுக்கொலை

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக காவலாளி நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் பிரதேச செயலகத்தில் வைத்து இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சம்பவத்தில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த குடும்பஸ்தரான நாகராசா விஜயகுமார் (வயது 32) என்ற காவலாளியே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

தம் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடாத்த முற்பட்டபோதே தாம் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்ட (04 ஆம் பக்கம் பார்க்க)

## மரண தண்டனை விதிக்கப்பட்ட ராஜபக்ஷ நேற்று நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் இருந்து 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல் போனவர்கள் தொடர்பாக மேல் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகள் நேற்று யாழ்.நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றது.

இதில் எதிராளியான வழக்காளி குறித்த காலப் பகுதியில் நடைபெற்ற கொலைகளுடன் தொடர்புடையவரென மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய் ராஜபக்ஷ கொழும்பில் இருந்து அழைத்துவரப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

எனினும் (04 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும்



## பாலித கோஹன்ன தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுடன் இலங்கை அரசாங்கத்துக்கு சிறந்தவகையிலான உறவு காணப்படுகின்றது. எமது நாட்டின் தேசிய பிரச்சினைக்கான தீர்வு,செயற்பாடு உட்பட அனைத்து செயற்பாடுகளுக்கும் இந்தியா உதவி வருகின்றது.

எதிர்காலத்திலும் இந்தியா இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் அரசாங்க சமாதான செயலகத்தின் செயலாளருமான பாலித கோஹன்ன தெரிவித்தார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது; அரசாங்கம் சர்வதேச மட்டத்தில் சிறப்பான உறவுகளை பேணிவருகின்றது. இலங்கைக்கு சர்வதேச மட்டத்தில் சிறந்த நன்மதிப்பு காணப்படுகின்றது என்பதனை பொறுப்புடன் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையிலிருந்து எறிகணைத் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா ஓமந்தைக்கு மேற்கிலுள்ள இராணுவ முன்னரங்கப் பகுதியில் இருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பாலமோட்டை, நவ்வி போன்ற பகுதிகளை நோக்கியும் முகமாலை, நாகர் கோவில் பகுதிகளின் இராணுவ நிலைகளில் இருந்து தெற்கு நோக்கி விடுதலைப்புலிகளின் பிரதேசங்களை நோக்கியும் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினர் தொடர்ச்சியாக எறிகணைத்தாக்குதல் நடத்தியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச–3)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காரைநகர் விவசாய சம்மேளனத்தை 5 ஆகப் பிரிக்க வேண்டாமெனக் கோரிக்கை

காரைநகர் விவசாய சம்மேளனத்தின் பூரண கணக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் வரை காரைநகர் விவசாய சம்மேளனத்தை ஐந்தாகப் பிரிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டாம் என விவசாயிகள் காரைநகர் உதவி அரசாங்க அதிபரிடமும் காரைநகர் கமநல சேவை பெரும்பாக உத்தியோகஸ்தரிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுவரை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை தனியாகப் பிரிக்கப்பட்டு ஒரு விவசாய சம்மேளனமே இயங்கிவந்தது. தற்பொழுது நிர்வாகத்தை இலகுவாக்க ஐந்தாகப் பிரிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் கடந்த கால கணக்குஅறிக்கை பூரணமாக சமர்ப்பிக்கும் வரை ஒத்திவைக்குமாறு அவர்கள் கேட்டுள்ளனர். (எ-246)

# யாழ்.பஸ் நிலைய கொட்டகைகளை விரைவாக செய்து முடிக்குமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பஸ் தரிப்பிட நிழற்கொட்டகை வேலைகளை விரைவாக செய்து முடிக்குமாறு வேலை ஒப்பந்த நிறுவனம் மற்றும் பிராந்திய போக்குவரத்து சபையினருக்கு அரச அதிபர் க.கணேஷ் அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று மாவட்டச் செயலகத்தில் வேலை ஒப்பந்த நிறுவனம் மற்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர்களும் பொறியியலாளர்களும் அழைக்கப்பட்டு குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்த போதே அரச அதிபர் இவ் அறிவித்தலை விடுத்துள்ளார்.

யாழ்.மத்திய பஸ் தரிப்பு நிலைய நிழற்கொட்டகைகள் இரண்டு புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மூதறிஞர் சொக்கன் நினைவுப் பேருரை இடம்பெறவுள்ளது.

இதில் 'யாழ்ப்பாணத் தமிழ் ஆசிரியர் கல்விப் பாரம்பரியங்களும் மரபுகளும் ஒரு வரலாற்றியல் பார்வை' என்ற தலைப் பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார். (ச)

# புதிய முகாமையாளர்கள் பொறுப்பேற்று

(பருத்தித்துறை)

வடமராட்சியிலுள்ள இலங்கை வங்கியின் இரு கிளைகளுக்கும் புதிய முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நெல்லியடி இலங்கை வங்கியின் முகாமையாளராக வி.தில்லைநாதனும் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளராக பி.ஆனந்தநடேசனும் நியமிக்கப்பட்டு, அவர்கள் கடமையை பொறுப்பேற்றுள்ளனர்.(ச-52)

# யாழ்.மறை மாவட்டத்தின் குருமுதல்வராக ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் நியமனம்

(யாழ்ப்பாணம்)


யாழ்.மறை மாவட்டத்தின் புதிய குருமுதல்வராக ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரை யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நியமித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் பொறுப்பேற்றுக் கொண்டதாக ஆயரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபர் பணியோடு, குருமுதல்வர் பணியையும் இணைந்து ஆற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

தனது சேவையின் அதிக காலத்தைக் கல்விப் பணியிலே ஆற்றி 2001 ஆம் ஆண்டு கல்விப் பணியில் 25 ஆண்டுகளை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் நிறைவு செய்துள்ளார்.

1976 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டுவரை இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியின் உப அதிபராகவும் 1989 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை அக் கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றிய பின்னர் புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராக அரச பாடசாலையிலிருந்து தனியார் பாடசாலைக்குப் பணிமாற்றம் செய்யப்பட்டார்.

இங்கிலாந்தில் தனது கலாநிதிப் பட்டத்தை 1986 - 1988 காலப் பகுதியில் நிறைவு செய்த இவர், 1991 ஆம் ஆண்டில் இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு I தரத்தையும் பெற்று 1990 - 1994 ஆண்டு காலப் பகுதியில் இளவாலைக் கோட்ட அதிபராகவும் பணியாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.



1998 ஆம் ஆண்டு முதல் யாழ்.பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினராகவும் 2003 ஆம் ஆண்டு முதல் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று சபையின் தலைவராகவும் கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆலோசனைச் சபை உறுப்பினராகவும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

இவர் தமது குருத்துவக் கல்வியை இலங்கை-கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும் இந்தியா - பூனே குருத்துவக் கல்லூரியிலும் பெற்று 1974 ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்றார். யாழ்.மறை மாவட்டத்தில் தனது கல்விப் பணியோடு கிளிநொச்சி, வலைப்பாடு, மாரீசன்கூடல், இளவாலை ஆகிய பங்குகளில் பங்குப் பணிகளையும் மேற்கொண்டார்.

இளவாலை மறைக்கோட்டத்தின் முதல்வராக 1994 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை பணியாற்றிய இவர், அதே காலப் பகுதியில் யாழ்.மறைமாவட்ட கவுன்சில் அங்கத்தவராகவும் பணியாற்றியுள்ளார்.

யாழ்.மறைமாவட்ட கல்வியாணைக்குழுவில் பணியாற்றிய இவர், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் 1999 ஆம் ஆண்டு தமது குருத்துவ வெள்ளி விழாவை கொண்டாடினார். (ச)

# மின் மோட்டர்களின் திருட்டு அதிகரிப்பு

(கோப்பாய்)

கோப்பாய் மத்திப் பகுதியில் கடந்த சில நாள்களாக நீர் இறைக்கும் மோட்டர் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றது. இரவில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் வேளையிலேயே இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதனால் வீட்டுக்குத் தொலைவில் உள்ள கிணறுகளில் மோட்டர்களைப் பொருத்தியோர் அச்சம் அடைந்து காணப்படுகின்றனர். (ச-79)

# சேவைக் கட்டணம் ஒரு ரூபாவால் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

ப.நோ.கூ.சங்கங்களுக்காக கடந்த 10 ஆம் திகதி யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற உணவு விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் தீர்மானத்தின் பிரகாரம் தங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவைப் பொருள்களுக்கான சேவைக் கட்டணம் 4 ரூபாவிலிருந்து 3 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இவ் அறிவித்தல் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து நிறுவைப் பொருள்களுக்குமான விற்பனை விலையை ஒரு ரூபா குறைத்துப் பொது மக்களுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ச)

# பிரித்தானியாவை எதிர்க்கும் சோமவன்ச அந்நாட்டு குடியுரிமையை கைவிடத் தயாரா?

## ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி

ஈழத் தமிழர்கள் தொடர்பாக விவாதம் நடத்தியமைக்காக பிரித்தானியாவைஎதிர்க்கும் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச, தான் வைத்திருக்கும் பிரித்தானிய குடியுரிமையை கைவிடத் தயாரா? என்று ஐக்கிய தேசியக் கட்சி சவால் விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளதாவது,

பிரித்தானியத் தலையீட்டை எதிர்த்துக் குரல் எழுப்புவதோடு தேசப் பற்றுள்ளவர்களாகத் தம்மை அடையாளம் காட்டும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் அவரது பிள்ளைகளும் பிரித்தானிய குடியுரிமையை கைவிடத் தயாரா? என்பதனை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

ஆனால் ஒருபோதும் அவர் அதனைச் செய்ய மாட்டார். ஏனெனில் ஆட்சி மாறினால் நாடு மாற வேண்டும். அதுதான் அவருடைய நிலை. இலங்கை நிலைமைகள் தொடர்பாக பிரித்தானிய நாடாளுமன்றத்தில் விவாதம் நடாத்தப்பட்டமை வரவேற்கத்தக்கது.

நாம் தவறு செய்யாவிட்டால் இதுபோன்ற விவாதங்களுக்கு ஏன் அஞ்ச வேண்டும்? தைரியமாக முகம் கொடுக்கலாம். ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் யுத்த முனைப்பே அனைத்துலக நாடுகள் எமது பிரச்சினை தொடர்பில் தலையீடுகளை அதிகரிக்க வழி வகுத்து. பிரித்தானியாவையோ அமெரிக்காவையோ குறைகூற முடியாது.

நாம் விட்ட தவறுகளினால்தான் இந்த நிலைமை உருவாகியது. தேசப் பற்றுள்ளவர் தாம் எனக் கூறி மக்களை ஏமாற்றும் சோமவன்ச அமரசிங்க உண்மையில் அதனை நிரூபிக்க வேண்டும்.

தனக்கும் பிள்ளைகளுக்கும் கிடைத்துள்ள பிரித்தானிய குடியுரிமையைக் கைவிட்டு ஏனையவர்களுக்கு அவர் முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்றார். (ச-5)

# ஐ.தே.கவின் ஜயலத் எம்.பி. நேற்று தமிழகம் பயணமானார்

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து இந்தியாவின் தமிழகத்திற்கு இடம்பெயர்ந்துள்ள தமிழ் அகதிகளின் தற்போதைய நிலைமை குறித்து ஆராய ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று இந்தியா பயணமாகியுள்ளார்.

தமிழகத்தில் தங்கியிருக்கின்ற வடக்குக் கிழக்கு தமிழ் அகதிகளின் நிலை குறித்து விரிவாக ஆராய்வதற்காக நான் தமிழகம் செல்கின்றேன்.

அம் மக்கள் அனுபவித்து வருகின்ற பிரச்சினைகள் குறித்து விசேட கவனம் செலுத்தவுள்ளேன். அவர்களுக்கான தேவைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கவுள்ளேன்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பதாக நான் தமிழகம் சென்று அங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைப் பார்வையிட்டேன் என ஜயலத் எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியிட்ட இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான யோசனை குறித்துச் சென்னையில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளதாக அவர் கூறினார்.

இலங்கையில் தற்போது மாகாண சபை அதிகாரங்கள் கூட்டப்பட வேண்டும் என்ற விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற போது சுதந்திரக் கட்சி மாவட்ட சபைஎன்ற பழைமையான கோட்பாட்டை முன்வைத்துள்ளது. இதனை இந்திய ஊடகங்களுக்கு விளக்கவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ச)

# மஹோற்சவம்

(பருத்தித்துறை)

கரணவாய் அருள்மிகு உச்சில் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

30 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ச-52)

# இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவி விலகினார்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரான அவுஸ்திரேலிய நாட்டவரான டொம் மூடி இலங்கைக்கான பயிற்சியாளர்என்ற பதவியினைத் தாம் தொடர்ந்தும் வகிக்கப் போவதில்லை என்று உத்தியோகபூர்வமாக இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்குத் தெரிவித்திருக்கின்றார்.

எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் இலங்கை அணியுடன் முடிபடையவுள்ள இவருடனான இரண்டு வருட ஒப்பந்தத்தினை தனது குடும்ப நலன்களைக் கருத்தில் கொண்டே எடுத்ததாகத் தம்மிடன் தெரிவித்துள்ளதாகவும் இவரது இந்த முடிபினை இலங்கைக் கிரிக்கெட் திருப்தியாக ஏற்றுக் கொள்வதாகவும் இலங்கைக் கிரிக்கெட்டின் செயலாளர் கெங்காதரன் மதிவாணன் தெரிவித்தார்.

டொம்மூடி இதன்பின்னர் அவுஸ்திரேலியா மேற்குப் பிராந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியினை எதிர்வரும் ஜூலை முற்பகுதியில் ஏற்கவுள்ளதாக தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட்டின் செயலாளர் மதிவாணன், டொம்மூடியின் உத்தியோகபூர்வ அறிவிப்பினைத் தொடர்ந்து இலங்கை அணிக்கான புதிய பயிற்றுவிப்பாளரைத் தேடும் பணியினைத் தாம் தொடங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கை அணிக்கான புதிய பயிற்றுவிப்பாளர் தொடர்பான பல்வேறு நபர்களின் பெயர்கள் ஊகங்களாக வெளியிடப்பட்டாலும் இதுவரை யாரும் தம்மை அணுகவோ அப்பதவிக்கு விண்ணப்பிக்கவோ இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# இலவச பகல் உணவுக்கென 100 கோடி ரூபா ஒதுக்கம்

பாடசாலை மாணவர்களுக்கு இலவச பகல் உணவு வழங்கும் திட்டத்திற்கு இவ்வருடம் 100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக கடந்த வருடத்தை விட கூடுதலான பாடசாலைகளை இவ்வருடம் பகல் உணவு வழங்கும் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ச)


சிவசர்வ சிவ சிவமுருகசிவ

திருநெல்வேலி காயாரோகன ஈச்வரர் 15.05.2007

தேர்த் திருவிழாச் சிறப்புக் கவிதை

*சர்வதேசியனே தேசியனேஉலக மகாசமாதானனே!*

*தற்காப்புச் சிவனே தேசசமாதானம் வாழ வைப்பாயே!*

-நல்லூர்சிவமுருகன் - என் - தமிழ்மகன் - பீ.ஏ-

சிவதேசியனே சர்வதேசியனே சர்வஉலக மகாசமாதானனே
சீர்நீலாய தாட்சிசமேத சிவகாயாரோகன சிவஈச்வரரே
சிவதர்மம் காத்திடவே சிவத்தீர்வை ஆளும்சிவனே
சிவத்தமிழ்தாய் சிவத்தலைவா சீரானதீர்வால் வாழவைப்பாயே
சிவஅறம்தெய்வ அரசியலோனே சமாதானநீதி வாழ்வியலோனே
சமாதானம் முன்னெடுத்து சமாதானநீதி வாழவைப்பாயே
நவசோதியனே சிவசூரியனே நமசிவாய சிவப்பேரோனே
நட்ராசசிவனே சமாதானவாழ்வு நாளும்தற்காத்து பாதுகாருமையா

பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் அதைக் கவர்ச்சி மிக்க பலன்கள் கிட்டும் வாழ்க்கையாகக் கருதக் கூடாது.

—டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

## கலைஞரின் குடும்ப அரசியல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள் எழுந்துள்ள குடும்பத் தகராறு காரணமாக தயாநிதி மாறன் தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இந்திய மத்திய அரசின் அமைச்சர்களில் மிகச் சிறந்த அமைச்சர் என்ற பெருமை தயாநிதி மாறனுக்குரியது.

அவரின் தகவல் தொழில்நுட்ப அறிவினால் இந்தியா முழுவதும் நன்மையடைந்தது. அதற்கு மேலாக தயாநிதி மாறனால் தமிழர்களுக்கே பெருமை கிடைத்தது.

எனினும் கலைஞர் கருணாநிதியின் குடும்ப அரசியலுக்குள் வீசி புயல் காரணமாக, தயாநிதி மாறன் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து விட்டது.

இந்தியாவின் எதிர்காலப் பிரதமர் என அளவீடு செய்யக் கூடிய தயாநிதி மாறனின் இராஜினாமா, ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கே இழப்பு எனக் கூறலாம்.

இத்தகைய பாதிப்புக்கள் தமிழர்களின் திறமை உலகெங்கும் பரவுவதற்குத் தடையாக அமையும்.

தயாநிதி மாறனின் விடயத்தில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும் அவரது திராவிட முன்னேற்றக் கழகமும் நிதானமாக முடிவெடுத்திருக்கலாம் என்பது பலரதும் கருத்து.

அதேநேரம் குறித்த சில ஊடகங்களின் பொறுப்பற்ற தன்மையாலும் தேவையற்ற சிக்கல்களைத் தமிழக அரசும், கலைஞர் கருணாநிதியும் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் அபிவிருத்திப் பாதையில் நடைபயின்று கொண்டிருக்கும் போது தமிழினம் குடும்பச் சண்டையிலும் பழிவாங்கும் படலத்தை அனுமதிக்க முடியாது.

மன்னர் ஆட்சி முதல் மக்கள் ஆட்சி வரை தமிழர்களின் சாபக்கேடாக நீடிக்கும் ஒற்றுமையீனமும் பொறாமையும் காட்டிக் கொடுத்தலும் என்றுதான் நின்றுபோகுமோ என்ற ஏக்கம் தமிழர்களின் பெருமை உலகெல்லாம் பரவ வேண்டும் என்ற நினைப்புடையவர்களை வாட்டிக்கொண்டேயிருக்கின்றது.

தமிழர்களின் ஆட்சிப் புலம் உலகில் எங்காவது ஓர் இடத்தில் வலுப்பெற்றிருக்குமாயின், ஈழத் தமிழர்கள் இத்துணை துன்பங்களை அனுபவித்திருக்க வேண்டி வந்திராது.

அதிலும் எட்டுக்கோடி தமிழர்களைக் கொண்டுள்ள தமிழகம், சமூக பொருளாதார அரசியல் சிந்தனைகளில் சிதறுண்டு கிடப்பதனால் ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க முடியாத பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எனவே இந்நிலைமை மாறவேண்டும். அரசியல் ஞானமும் முதுபெரும் தலைமைத்துவ ஆளுமையும் கொண்ட கலைஞர் கருணாநிதி போன்றவர்களின் காலத்தில் தமிழர்களிடையே ஒன்றுமை ஏற்படாத பட்சத்தில் என்றுமே அந்த ஒற்றுமை ஏற்பட்டு விடாது என்ற கருத்தின் நிலையில்- கலைஞர் கருணாநிதியின் ஆட்சியில்- அவரின் அடுத்த அரசியல் வாரிசு பற்றிய கருத்துக் கணிப்பில்- அவரின் கட்டளைக்குட்பட்ட ஊடகங்களினால் அவரின் குடும்பத்திற்குள்ளேயே குழப்பமும் குத்துவெட்டும் ஊடகவியலாளர்களின் படுகொலையும் நடந்தேறியுள்ளது.

சட்டசபை உறுப்புரிமையின் ஐம்பது ஆண்டுகளைக் கலைஞர் கருணாநிதி நிறைவு செய்யும் வேளையில், கருத்துக் கணிப்பு என்ற பேரில் வந்த பேய், தயாநிதி மாறனின் அமைச்சுப் பதவியைப் பறித்தமை வேதனையான நிகழ்வே.

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 51 வீதமானோர் சித்தியடையவில்லை

## பரீட்சைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இறுதியாக நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 51 வீதமான மாணவர்கள் சித்தியடையவில்லை என்று பரீட்சை ஆணையாளர் அநுரா எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 5 இலட்சத்து 25 ஆயிரம் மாணவர்கள் இந்தப் பரீட்சையில் தோற்றி இருந்தனர். இதில் 48.7 வீதமான மாணவர்கள் கல்விப் பொதுத் தராதர உயர் தரத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 21 ஆயிரத்து 813 மாணவர்கள் ஒரு பாடத்திலும் சித்தியடையவில்லை. இதில் 4 ஆயிரத்து 128 பேர் கொழும்பு மாவட்டத்தையும் 3 ஆயிரத்து 564 பேர் மத்திய மாகாணத்தையும் 3 ஆயிரத்து 404 பேர் தென்மாகாணத்தையும் 2 ஆயிரத்து 668 பேர் சப்ரகமுவ மாகாணத்தையும் 2 ஆயிரத்து 277 பேர் ஊவா மாகாணத்தையும் 2 ஆயிரத்து 056 பேர் வடமத்திய மாகாணத்தையும் 2 ஆயிரத்து 039 பேர் வடமேற்கு மாகாணத்தையும் 773 பேர் கிழக்கு மாகாணத்தையும் 704 பேர் வடமாகாணத்தையும் சேர்ந்தவர்கள் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள 9 பாடசாலைகளிலிருந்து ஒரு மாணவனும் சித்தியடையவில்லை. அரசு கல்விக்கு அதிகளவு நிதியை ஒதுக்கும் போதும் இது துரதிர்ஷ்டவசமானது. பாடப் புத்தகங்கள், ஆய்வு கூடங்கள் ஏனைய பொருள்கள் என பல வசதிகள் இருந்தும் மாணவர்களின் தரம் உயரவில்லை.

ஆங்கிலம் மிகவும் பின்தங்கியதாகவே உள்ளது. ஆங்கிலப்பாடம் எடுத்த 2 இலட்சத்து 58 ஆயிரத்து 975 மாணவர்களில் 63.18 வீதமானவர்கள் சித்தியடையவில்லை. கணிதத்துறையில் 2 இலட்சத்து 59 ஆயிரத்து 263 மாணவர்களில் 57.37 மாணவர்களும் விஞ்ஞானத்தில் தோற்றிய 2 இலட்சத்து 58 ஆயிரத்து 948 மாணவர்களில் 51.65 வீதமான மாணவர்களும் சித்தியடையவில்லை.

இது தொடர்பான அறிக்கை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவினால் இந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளது.

(ச-

# உயர் பட்டப் படிப்புக்கள் பீட பரீட்சை அனுமதி அட்டைகள் பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தினது வவுனியா வளாகப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா முதலாம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான பரீட்சை அனுமதி அட்டைகளை வவுனியா வளாக வியாபார கற்கை நெறி பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். இதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பரீட்சைக்கு விண்ணப்பித்த வவுனியா வளாக பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர்கள் மற்றும் மீள் பரீட்சைக்கு விண்ணப்பித்த கல்வி ஆண்டு 2004/05 ற்குரிய முழு நேர, பகுதி நேர டிப்ளோமா மாணவர்கள் பட்டப் பின் முதுமாணி, பட்டப் பின் டிப்ளோமா, நூலகத் தகவல் விஞ்ஞான மாணவர்கள் தங்கள் பரீட்சை அட்டைகளை உயர் படிப்புக்கள் பீடத்தில் தங்களது மாணவர் அடையாள அட்டையைக் காண்பித்து இன்று தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி அறிவித்துள்ளார்.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா 2 ஆம் வருட மற்றும் அதற்குரிய மீள் பரீட்சையும் எதிர்வரும் ஜூன் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

(ச)

# பிரிட்டன் பாராளுமன்றத்தில் நடைபெற்றதுபோல ஐரோ.,அமெ.பாராளுமன்றங்களிலும் நிகழும்

## ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துச்செல்வது சர்வதேச மட்டத்தில் ஆரோக்கியமற்ற நிலைமையையே தோற்றுவிக்கும். இலங்கை விவகாரம் தொடர்பாக பிரிட்டன் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தை ஒரு ஆரம்பமாகவே நாங்கள் கருத வேண்டும்.

இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துச் சென்றால் எதிர்காலத்தில் ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்திலும் அமெரிக்கக் காங்கிரஸ் சபையிலும் இலங்கை விவகாரம் தொடர்பாக விவாதம் இடம்பெறலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அரசாங்கம் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தின் ஆதரவினை இழந்து வருகின்றது. தற்போதைய நிலைமையில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சரினால் தமிழகத்திற்குச் செல்ல முடியுமா? என்று சவால் விடுகின்றேன்.

இந்தியாவின் புதுடில்லியை விட தமிழகமே எங்களுக்கு மிக முக்கியமாகும் என்றும் அவர் கூறினார். நாட்டின் அரசியல் சூழ்நிலை தொடர்பாகக் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்கள் கடத்தப்படுவதாகப் பெற்றோர் என்னிடம் குற்றஞ்சாட்டி வருகின்றனர். நான் இது விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளேன்.

எதிர்க்கட்சியின் எம்.பி. என்ற வகையில் என்னால் இதனை மட்டுமே செய்ய முடியும். இருப்பினும் நாட்டின் இவ்வாறான மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுகின்றமை சர்வதேச மட்டத்தில் பாதகமான நிலைமையை ஏற்படுத்தும்.

இந்த அரசாங்கத்தை நாங்கள் கவிழ்க்க வேண்டிய அவசியமில்லை. விரைவில் இந்த அரசாங்கம் சரிந்து விடும். அதன் பின்னர் நாட்டின் ஆட்சியைப் பொறுப்பேற்று நாட்டைக் கொண்டு நடத்த சர்வதேசத்தின் ஆதரவு அவசியமாகும்.

இதற்கான ஏற்பாடுகளையே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கொண்டுவருகின்றார். சர்வதேச சமூகத்தை விமர்சனம் செய்து விட்டு மறுபுறத்தில் உதவிகளை வழங்கும்படி கோருவதில் அர்த்தமில்லை. சர்வதேச சமூகத்தின் உதவிகளின்றி எமது நாட்டினால் முன்னேற முடியாது.

(ச-5)

# விவசாய உற்பத்தி பொருள்களைப் பதப்படுத்த மாதர் சங்கங்களை ஈடுபடுத்த நடவடிக்கை

(கோண்டாவில்)

யாழ்.குடாநாட்டில் விவசாய உற்பத்திப் பொருள்களின் பெறுமான அதிகரிப்பில் மாதர் சங்கங்களை ஈடுபடுத்தி அதனூடாக அச் சங்கங்களைப் பலப்படுத்தும் திட்டத்தை யாழ். விவசாயத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

சொலிடர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 4 மகளிர் சங்க அமைப்புகளுக்கு உணவை உலர்த்துதல், பதனிடல் பின்னர் பற்றாக்குறையான காலங்களில் அவற்றைச் சந்தைப்படுத்தி விலைத் தளம்பலைக் கட்டுப்படுத்தல் மற்றும் உணவுத் தொழில் முகாமைத்துவம், கணக்கீட்டுப் பயிற்சிகள் போன்றன விவசாயத் திணைக்களத்தால் கடந்த மூன்றாம் திகதி தொடக்கம் ஒரு மாத காலமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இப் பயிற்சி முடிவில் உணவு பதனிடும் தொழில் முயற்சிக்கு ஆரம்ப மூலதன நிதியுதவியாக தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் மாவட்ட விவசாயத் திணைக்களப் பிரதி அதிகாரி கே.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்துள்ளார். (ச-36)

# எமது பிரச்சினையில் தலையிட எந்த நாட்டிற்கும் உரிமையில்லை

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு எந்த நாட்டிற்கும் உரிமை கிடையாது என பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் பண்டார நாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் பங்கேற்றுப் பேசியபோது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாம் மனித உரிமைகளை மீறுவதாக சில நாடுகள் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் அந்த நாடுகளினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை யாரும் குற்றஞ் சாட்டுவதில்லை.

நாட்டின் தேசிய பாதுகாப்பையும் ஒருமைப்பாட்டையும் அரசு கைவிட முடியாது. எமது படையினரின் தியாகங்களை நாம் பாதுகாக்க வேண்டும். அல்லது எம்மை அரசு என அழைக்க முடியாது. இராணுவ நடவடிக்கைகள் படையினரால் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே எப்போது எங்கு எந்த முறையில் அதனை மேற்கொள்வது என அவர்கள் முடிவெடுப்பர் என்றார்.

(ச-5)

# சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் போது அவரின் பாதுகாப்புக்கு உறுதி வழங்க வேண்டும்

## மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவிப்பு

சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்யும் போது கைதுசெய்யப்படுபவரின் பாதுகாப்புத் தொடர்பாக அதிகாரிகள் உறுதி வழங்க வேண்டும்.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பது பொலிஸ் அதிகாரிகளின் முக்கிய கடமையாகும் என்று மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்புப் பிரிவின் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் ஆகியோருக்கு கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக இடம் பெற்ற செயலமர்வின் போதே மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; சர்வதேச சமூகத்தினால் மனித உரிமை என்றால் என்ன? என்பது தொடர்பான ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இதில் சட்டவிரோத கைதுகள் போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டன.

இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டதையடுத்து ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகளை பாதுகாக்குமாறு அனைத்து நாடுகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

சந்தேக நபர் ஒருவரை கைது செய்யும் போது சாட்சிகள் இருப்பது தொடர்பாக அந்த அதிகாரி திருப்தியடைய வேண்டும். கைது செய்யப்படும் சந்தேகநபரது பாதுகாப்பிற்கு பொலிஸ் அதிகாரிகள் உறுதி வழங்க வேண்டும். கைது செய்யப்பட்டவருக்கு மனித உரிமை தொடர்பாக விளக்கமளிக்கப்படல் வேண்டும். கைது செய்யப்பட்டவரின் மனித உரிமைக்கு மதிப்பளிப்பது பொலிஸ் அதிகாரியின் கடமையாகும்.

பொலிஸ்மா அதிபரும் இது தொடர்பரன சுற்று நிருபம் ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் அவரது உரிமைகள் தொடர்பாக அவருக்கு விளக்கமளிக்கப்படல் வேண்டும்.

ஒருவரைக் கைது செய்யச் செல்லும் போது அவருக்கு உரிய காரணத்தை கூறுங்கள். கைது செய்யப்பட்டதற்கான காரணம் குறித்து அவர் அறிவூட்டப்பட வேண்டும். அவசர காலச் சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்யும்போது சந்தேக நபர் அவசர கால விதிகள் அடிப்படையில் செய்த தவறு அல்லது குற்றச்சாட்டு தொடர்பாக அந்த அதிகாரி திருப்தியடைந்திருத்தல் வேண்டும்.

கைது செய்யப்பட்ட ஒருவரை 24 மணி நேரம் மாத்திரமே பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கமுடியும். இரண்டு மணி நேரத்தில் விசாரணை முடிவடைந்தாலும் நீதிமன்றத்தில் நிறுத்துவதா? அல்லது பிணை வழங்குவதா? என்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படல் வேண்டும்.

ஒருவரைக் கைது செய்வதாயின் பொலிஸ் அதிகாரி சீருடை தரித்திருத்தல் மட்டும் போதாது, அவரது அடையாளத்தினையும் தராதரத்தினையும் வெளிப்படுத்துவது அவசியம்.

அவ்வாறு செய்யா விட்டால் சட்டத்தின் அடிப்படையிலும் ஜனாதிபதியின் சுற்று நிருபத்தின் அடிப்படையிலும் அது தவறாகும். கைது செய்யப்படுபவர் தொடர்பான பொறுப்பு உங்களிடமே உள்ளது.

ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யும்போது அது தொடர்பான உறுதி வீட்டாருக்கு வழங்கப்படவேண்டும். (ச)

# கல்கிசையில் மூவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கல்கிசை கொனா கோவில் பிரதேசத்தில் நேற்று மாலை இடம் பெற்ற இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று மாலை 5.45 மணியளவில் தெஹிவளை கல்கிசை நகர சபை உறுப்பினர் ஒருவரின் வீடொன்றை கொள்ளையிட்டதன் பின்னர் கொனா கோவில் இராணுவச் சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த இராணுவ சிப்பாயின் துப்பாக்கியை பறிக்க முயன்றுள்ளனர்.

இராணுவம் திருப்பித் தாக்கியதில் கொள்ளையர்கள் மூவரும் உயிரிழந்ததாகவும் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் வீட்டைக் கொள்ளையிட்டு ஆட்டோவில் திரும்பிக்கொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

# கடத்தப்பட்ட மாணவர்களை விடுவிக்க சேனாதிராசா எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

கடத்தப்பட்ட மாணவர்களை உடன் விடுவிக்க வேண்டும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கோரியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த 4 ஆம் திகதி இரவு புனித பரியோவான் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டு இன்றுவரை காணாமல் போயுள்ளனர்.

ஊரடங்கு உத்தரவு நேரத்தில் மோட்டார் சைக்கிள்களில் ஆயுதங்களுடன் வந்தவர்கள் தங்கள் முன்னிலையில் தங்களையும் அச்சுறுத்தி விட்டு இம் மாணவர்களை கடத்திச் சென்றுள்ளதாக மாணவர்களின் பெற்றோர் முறையிட்டுள்ளனர்.

இம் மாணவர்கள் 2007 இலும் 2008 இலும் க.பொ.த.உயர் தரத் தேர்வுக்கு தோற்றவுள்ள 17 வயது, 18 வயது மாணவர்கள். இத்தகைய கைது, கடத்தல், காணாமல் போதல், கொலைகள் முதலிய சம்பவங்கள் நாளாந்த நிகழ்ச்சியாகிவிட்டன.

அச்சத்தினாலும் மன உளைச்சலினாலும் ஏற்கனவே அவலப்படுகின்ற மாணவர்கள் பெற்றோர் ஆசிரிய சமூகத்தினரும் பிள்ளைகளை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவோ கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் பெரிதும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பாக கடந்த 10 ஆம் திகதி ஜனாதிபதியை, உடன் தலையிட்டு கடத்தப்பட்ட மாணவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கடிதம் அனுப்பியதுடன் தொடர்புகளையும் ஏற்படுத்தியிருந்தேன்.

ஆனால் இதுவரை ஜனாதிபதியோ அரசோ இம் மாணவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு அரசாங்கமே பொறுப்புக்கூறவேண்டும்.

ஏற்கனவே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் கல்வியை மேலும் சீரழிக்கும் இத்தகைய நட வடிக்கைகளை தடுத்து நிறுத்தி எம் எதிர்கால சந்ததியின் கல்வி மேம்பாட்டிற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

மாணவர்களை கடத்தியதனால் மாணவர்கள் அதற்கு எதிராக போராட்டங்களைத் தொடர்வது தவிர்க்கமுடியாதுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தேசிய இனப்பிரச்சினைத்...

கூறுகின்றேன்.

இராஜதந்திர ரீதியில் வெளிநாடுகளுடன் நாங்கள் தொடர்புகளை வலுப்படுத்தி வருகின்றோம். முக்கியமாக இந்தியாவுடன் நாங்கள் சிறந்த விதத்திலான தொடர்புகளை பேணி வருகின்றோம். இந்திய தலைவர்களுடன் அடிக்கடி பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றோம். இலங்கையின் தேசிய பிரச்சினை தீர்வு உட்பட அனைத்து செயற்பாடுகளிலும் இந்தியா எமக்கு முழுமையான ஆதரவினை வழங்கி வருகின்றது.

இலங்கை விவகாரம் தொடர்பாக இந்தியா காட்டிவரும் கரிசனை தொடர்பாக திருப்தியடைகின்றோம். இந்தியா தொடர்ந்து இலங்கைக்கு உதவிகளை வழங்கும் என்று எதிர்பார்க்கின்றோம். இராஜதந்திர மட்டத்தில் இதற்கு தேவையான ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம் என்றார். (ச-5)

## சண்டிலிப்பாய்...

தாக இராணுவத்தினர் விசாரணையில் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்திலிருந்து கைக்குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## மரண...

அக் காலப்பகுதியில் கடமை யாற்றிய இராணுவ அதிகாரிகள் விசார ணைக்கு சமுகமளிக்காததுடன் இவ் வழக்கு விசாரணைக்கு எதிராக மேல் முறையீட்டு நீதிமன்றில் முறைப்பாடு செய்ததற்கு அமைய அதன் தீர்ப்பையடுத்து எதிர்வரும் யூலை மாதம் 23 ஆம் திகதி வழக்கு விசாரணையை ஒத்திவைப்பதாகவும் அன்று மன்றில் எதிராளிகள் சமுகமளிக்க வேண்டுமெனவும் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவு பிறப்பித்தார். (ச-5)

## நோர்வேயிலிருந்து...

நொச்சியில் தங்கியிருந்தார்.

கடந்த மார்ச் மாதம் இவர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்றபோது காணாமல் போயுள்ளதாக நோர்வே நாட்டின் நாளேடு ஒன்று கடந்த சனிக்கிழமை தெரிவித்துள்ளது.

நோர்வேயிலுள்ள சௌந்தரராஜனின் குடும்ப அங்கத்தவர்கள் இலங்கையில் உள்ள நோர்வேத் தூதரகத்துடன் தொடர்ச்சியாக தொடர்பில் இருப்பதாகவும் நோர்வேத் தூதரக அதிகாரிகளும் குடும்ப அங்கத்தவர்களும் அவரைக் கண்டு பிடிப்பதற்கு கடும் முயற்சிகள் எடுத்து வருவதாகவும் கிளாசகம்சன் என்ற நாளேடு தெரிவித்துள்ளது.

சௌந்தரராஜன் காணாமல் போனது தொடர்பாக தாம் உன்னிப்பாக நிலைமைகளை அவதானித்து வருவதாகவும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் கிரிஸ்ரின் மெல்ஸம் தெரிவித்துள்ளார்.

எனினும் தூதரகம் இது தொடர்பான தகவல்களை தரமறுத்துவிட்டது. நோர்வேத் தூதரகம் தமது வெளிநாட்டு அமைச்சுக்கு இது தொடர்பான தகவல்களை உடனுக்குடன் தெரிவித்து வருவதாகவும் அந்த நாளேடு மேலும் தெரிவித்துள்ளது.

இரு வாரங்களுக்கு முன்னர் நோர்வேயில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் நோர்வே அதிகாரிகள் இது தொடர்பில் தொடர்புகளை மேற்கொண்டுள்ளனர். நீண்ட காலத்தின் பின்னர் நோர்வேயைச் சேர்ந்த ஒருவர் இலங்கையில் காணாமல் போயிருப்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## மனித உரிமை மீறல்கள்...

னார்வ தொண்டர் அமைப்பின் 17 உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளை நேற்று வீடியோ கமரா பதிவு மூலம் ஆரம்பித்தது. நேற்றைய விசாரணைகளின் போது இந்த சம்பவத்தினை விசாரித்து வந்த பொலிஸ் அதிகாரிகள் சிலர் தத்தமது வாக்கு மூலங்களை அந்தரங்கமான முறையில் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் அளித்திருக்கிறார்கள்.

இந்த விசாரணைகள் இன்றும் இடம் பெற இருக்கின்றன. நேற்றை விசாரணைகளின் போது சர்வதேச பிரதிநிதிகளும் கண்காணிப்பாளர்களாக பிரசன்னமாகியிருந்தனர்.

இதுபோன்ற விசாரணைகளை இந்த ஆணைக்குழு காலத்திற்குக் காலம் தேவைக்கு ஏற்ப மேற்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ச)

## தி.மு.க...

உத்தரவுப்படியே என்றும் தான் நடப்பேன் என்றும் கூறியுள்ளார்.

அத்துடன் தான் கட்சியின் கட்டுப்பாடு எதனையும் மீறவில்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அது மாத்திரமல்லாமல் தி.மு.க.கட்சிக்காரனாகப் பிறந்த தான் தி.மு.க.கட்சிக்காரனாகவே இறக்க விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சன்டீவி மற்றும் தினகரன் பத்திரிகைக்கும் தனக்கும் சம்பந்தம் கிடையாது என்றும் அவர் கூறியுள்ளார். இதற்கிடையே தமிழக அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்கள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை புதுடில்லியில் சந்தித்துள்ளார்.

தயாநிதி மாறனை மத்திய அமைச்சர் பதவியிலிருந்து நீக்குவதற்கான தி.மு.கவின் முடிவையடுத்து இந்த விடயம் குறித்து தமிழக முதல்வர் கருணாநிதி எழுதிய கடிதத்தை அவர் பிரதமரிடம் கையளித்துள்ளார்.

அதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய ஆற்காடு வீராசாமி அவர்கள் மத்திய அமைச்சரவையில் மாற்றம் வருமென்றும் அதனைப் பிரதமர் அறிவிப்பார் என்றும் கூறியுள்ளார். (ச)

## தேசிய அரசு அமைப்பதற்கு...

மூத்த ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களின் ஆலோசனைகளுக்கு அமைய இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு கடந்த வெள்ளிக்கிழமை சம்மதம் தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் இந்தத்திட்டத்தை கடந்த ஜனவரில் அரசாங்கத்தில் இணைந்து அமைச்சரான தனது நண்பரினூடாக பிரேரித்திருந்தார்.

இரு பெரும் அரசியல் கட்சிகளினாலும் இனப்பிரச்சினைக்கு ஒரு தெளிவான தீர்வை முன்வைக்கமுடியவில்லை. எனவே புதிதாக ஒரு திட்டத்தை முன்வைக்கவேண்டும் என அவர் அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மகிந்தவை இணங்க வைப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து கட்சி தாவிய உறுப்பினர்கள் முயற்சிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

நான் அரசாங்கத்திற்கு புதியவன் எனவே ஐக்கிய தேசியக்கட்சி இந்த திட்டத்தை முன்வைத்தால் மட்டுமே என்னால் மகிந்த ராஜபக்ஷவுடன் பேச முடியும் என இதற்கு பதிலளித்த அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே கடந்த வெள்ளிக்கிழமை கட்சி தாவிய ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு தனக்கு சம்மதம் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் தனது விருப்பத்தை ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களிடம் தெரிவிக்கும் படியும் அவர் அமைச்சரை கேட்டுக்கொண்டுள்ளார்.

எனினும் இது தொடர்பாக தமக்கு அரசாங்கத்திடம் இருந்து உத்தியோகபூர்வமான அழைப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ச-5)

## பல்கலைக்கழக...

சித்த மருத்துவ பீடத்தில் 07 பேருக்கும் விவசாயத்தில் 27 பேருக்கும் மற் றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணியாளர்கள் 24 பேருமாக 270 பேருக்கு மரண தண்டனை வழங்கப்படும் என அத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 270 பேரையும் தாம் இனங்கண்டுள்ளதாகவும் சந்தர்ப்பம் வரும்போது இவர்கள் ஒவ்வொருவருக்கும் மரண தண்டனை வழங்கப்படுமெனவும் அத் துண்டுப் பிரசுரத்தின் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு என்ற பெயரில் யாழ்.நகரில் சில முக்கிய பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பெயர் குறிப்பிட்டு மரண தண்டனை எச்சரிக்கை பிரசுரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.